# காமாட்சிஅம்மா கார்த்திகேசு

**KAMADCHYAMMA KARTHIGESU**

Mem 49/27

பிறப்பு 23 பங்குனி 1920
இறப்பு 23 புரட்டாதி 1998

இலங்கைத்தீவு ஓர் அழகானது. அதிலும் ஒரு தீவு காரை தீவு. இது மூர்த்தி, தலம், தீர்த்தம், என்ற மூன்றும் ஒருங்கே அமையப் பெற்றது. சிறந்த அறிவாளர்கள் பலரை தோற்றுவித்த இப்புனித பூமியில் சண்முகம் பிள்ளை வள்ளியம்மைக்கு 23.03.1920ல் பிறந்தார். இவர் பிறந்து மொழிபயின்ற காலங்களில் நற்பண்பும் கடவுள் பக்தியும் இவரை நன்நெறிப் படுத்தியும் சிறந்த பண்பாளராகவும் அவரை வழிநடத்தியது. இதுவே இவருடைய அடையாளச் சின்னமாக இவரை வழிநடத்தியது.

தனது திருமணப்பருவத்தில் நாகமுத்து கார்த்திகேசு என்னும் பிரபலவர்த்கரை (பசறை) திருமணம் செய்து இல்லறத்தில் இணைபிரியா இல்வாழ்க்கை நடாத்தி வந்தார். இவர்களுக்கு சிவலிங்கம், சுகிர்தானந்தன், சரோஜினி அம்மா, ரட்ணகுமார் என்ற நான்கு பிள்ளைகளாக இவர்களது வாழ்க்கைத்துணைவர்களாக புகனேஸ்வரி, நாகேஸ்வரி, கணேசலிங்கம், சீதாதேவி, என்ற மருமக்களையும் இவர்களது பிள்ளை களாக அனுஸா, சிவதாஸ், கந்தராஜ், தயாபரன், சுகந்தி, இரத்தினஜோதி, ஈசன், கார்த்திகா, அபிராமி, ஞானகி என்கின்ற புத்திரர்களையும் கண்டு ஆலமரத்தின் தனது வாழ்க்கையில் ஒரு முழு நிறைவை கண்டு ஆத்மதிருப்தியை பெற்றுக்கொண்டவர் என்றால் அது அவருக்கு நிகராகாது.

இவரது வாழ்க்கையின் அரை வழிப்பயணத்தில் தனது கணவரான கார்த்திகேசுவை காலன் கைப்பிடித்துக்கொண்டான். அதிலும் இவர் மனம் தளர்ந்துவிடாது கணவர் எவ்வழியோ மனைவியும் அவ்வழி யாகவே திகழ்ந்தவர். தனது வாழ்க்கைப் பயணத்தில் இடைவிடாத முயற்சியும் கொண்டவர். தனது பிள்ளைகளையும் தனது வழியில் வழிநடத்தி

> "ஈன்ற பொழுதில் பெரிது உவக்கும் தன்மகனை
> சான்றோன் எனக்கேட்ட தாய் "

என்ற வள்ளுவர் வாய்மொழி இவருக்கு வழம்கொழிக்க வழிவகைசெய்தது என்றுகூட சொல்லலாம். இவர் என்றும் ஒய்ந்து விடுவதில்லை தனது முழுநேர உழைப்பாக விவசாயம் செய்வதிலும் அதிலே காலையும் மாலையும் தன்னை அர்ப்பணித்து சிறந்த பயன்கள் பல பெற்றார். இருவராக தொடங்கிய வாழ்கைப்பயணத்தில் தனி ஒரு மனிதனாக நின்று சிறந்த பல செயல்கள் செய்தார் என்றால் அவருக்கு நிகர் அவரே.